IN THE COURT OF THE ADDL. DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.320/2018
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.25p.m.

<u>பி.வா.சா. 1சாட்சி பாக்கியம் க.பெ.சோமன்</u>

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Additional District Munsif on 02.04.2025 in accordance with the provisions of Act XX141.**

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

1. வாதியின் வீட்டிற்கு தென்புறமாகத்தான் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டை நவம்பர் 2018ல் பராமரிப்பு செய்தேன் என்றால் சரிதான். ( சாட்சி பின்னிட்டு நினைவில்லை என்று கூறுகிறார்.) நான் 1992ல் கிரையம் வாங்கிய சொத்தின் அளவுகள் தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவருக்குத்தான் தெரியும். எனது வீட்டின் தலைவாசல் எந்த திசையில் உள்ளது என்றால் தெற்கு பார்த்த வாசல் ஆகும்.

2. வாதிக்கு கிரையம் கொடுத்த அருணாச்சலம் இராஜம்மாள் நான் கிரையம் வாங்குவதற்கு முன்பாகவே அவர்கள் கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் 1996ல்தான் கட்டுமானம் கட்டப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கட்டிடத்தின் அடியளவு தெரியுமா என்றால் தெரியாது. 2012ல் எவ்வளவு பரப்பளவில் கட்டுமான பணிகளை செய்தோம் என்றால் ( பிரதிவாதி வழக்கறிஞர் சாட்சி குறுக்கு விசாரணையில் குறுக்கிட்டு வருகிறார்.) 8அடி 10 அடி இழுத்து கட்டியுள்ளோம்.

3. எனது சொத்திற்கு வடக்கு பக்கமாக எத்தனை அடி கட்டுமானம் கட்டியதுபோது காலியிடம் உள்ளது என்றால் 2 அடி உள்ளது. எனது சொத்திற்கு வடக்கு பக்கத்தில் எத்தனை பேர் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் நான்மட்டும்தான் அனுபவம் செய்து வருகிறேன். எனது சொத்தை எத்தனை முறை சர்வேயர் மூலம் அளக்க முயற்சி செய்தேன் என்றால் 2முறை ஆகும். நீதிமன்ற ஆணையர் வழக்குச் சொத்தை அளவீடு செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும்.மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கையை படித்து பார்த்து விபரம் தெரிந்துகொண்டேனா என்றால் படித்து காண்பித்தார்கள். தற்போது நினைவில்லை.

4. நீ.ம.சா.ஆ.1 ல் உள்ள வரைபடத்தில் சிவப்பு நிறத்தில் C1, D1 பகுதியானது நான் ஆக்கிரமிப்பு செய்த பகுதியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை. மேற்படி நீ.ம.சா.ஆ.1ற்கு ஆட்சேபனை தாக்கல் செய்தேனா என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண் 224/2ல் வாதிக்கு பாத்தியப்பட்ட 24 3/4 x 2 அடி அளவுள்ள சொத்தினை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

5. மேற்படி நான் ஆக்கிரமிப்பு செய்துள்ள 2வது இலக்கச் சொத்தின் பட்டா தற்போதும் வாதியின் பெயரில்தான் உள்ளது என்றால் சரியல்ல. எனது வீடு கட்டியுள்ள இடமானது மாநகராட்சியால் மனைப்பிரிவுகளாக அங்கீகாரம் பெறப்படாத இடம் என்றால் தெரியாது. எனது வீட்டிற்கான கட்டிட வரைபட அனுமதி எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. தாவாச் சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றும்,

நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றும், அதனை வாதி வசம் ஒப்படைக்க கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

6. மேற்படி ஆக்கிரமிப்புடன் நான் 2வது இலக்கச் சொத்தில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் குழாய் மற்றும் கழிவுநீர் குழாய் அமைத்துள்ளதையும் அப்புறப்படுத்த கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 2வது இலக்கச் சொத்தில் உள்ள எனது ஆக்கிரமிப்பை அகற்றி 2வது இலக்கச் சொத்தை வாதி வசம் ஒப்படைக்க வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்:12.50 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.04.02 11:14:11 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.